**அனுப்புநர்**

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 014894 /பி1/2021** **நாள் :14.12.2021**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம்– செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு – மறுகூட்டலுக்கு விண்ணபித்தவர்களுள் மதிப்பெண்ணில் மாற்றம் உள்ள பதிவெண்கள் விவரம் குறித்த செய்திக்குறிப்பு வெளியிடக் கோருதல் – சார்பு.

******

செப்டம்பர் **2021**, பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு, மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண்களில் மாற்றம் உள்ளவர்களது பதிவெண்கள் விவரம் குறித்த **"செய்திக்குறிப்பு"** இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

இச்செய்திக்குறிப்பினை பொதுமக்களும், தேர்வர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடுமாறும், வானொலி / தொலைக்காட்சியில் ஒலி / ஒளி பரப்பிடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கினே்.

இது விளம்பரம் அல்ல எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு :-**
செய்திக்குறிப்பு

**நகல்**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–600 006.**

**செப்டம்பர் 2021, பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு மறுகூட்டல் முடிவுகள் வெளியிடுதல் குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்ற செப்டம்பர் 2021 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு முடிவின்மீது மறுகூட்டல் கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது தேர்வெண்களின் பட்டியல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் **15.12.2021 (புதன்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு,** வெளியிடப்படுகிறது. இதில் இடம்பெறுபவர்கள் தங்களது தேர்வெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண் அடங்கிய தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இப்பட்டியலில் இடம் பெறாத தேர்வெண்களுக்கான விடைத்தாட்களின் மதிப்பெண்களில் எவ்வித மாற்றமும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–
இயக்குநர்

தேதி :-14.12.2021

இடம் :–சென்னை –600 006.